# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/29 - 2018 ජනවාරි මස 10 වැනි බදාදා - 2018.01.10

*2053/29 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது குறிப்பு இல.:* KDS/MDB/4/2/1/79/12.
*காணி அமைச்சின் இல.: 13/97/*FR*/327.*

*ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

**நகல்ஸ் மலைசாரலின் பாதுகாப்பிற்காக காணியை எடுத்துக்கொள்ளல்:**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவில் உடசியபத்துவ கோரளை சிறு பிரிவில் உள்ள மாங்கொட 806 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாங்கொட கிராமத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2017.09.08 ஆந் திகதிய இறுதிவரைபட இல. மஹ. 6734 இல் துண்டு இல. 01 எனக் காட்டப் பட்டுள்ள 2.8448 ஹெக்டயார் விஸ்தீரணம் உடைய கந்தே வத்த எனும் கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு*

**துண்டு இல. 01**

*காணியின் பெயர்: கந்தே வத்த; விபரம்: முற்புதர்க்காடு; ஆரம்ப உரிமை கோருபவர்: மாங்கொட, மெதமஹநுவரவில் வசிக்கும் வை. எம். முதுமெனிக்கா, வை. எம். ஹீன்பண்டா, வை. எம். அபேரத்ன; விஸ்தீரணம்: 2.8448 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி பி. ப. 02.00 மணிக்கு மெததும்பர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதி களாக எனக்கு அறிவிக்கும் படியும் விசாரணைகளின் போது காணி உறுதிப் பத்திரம் மற்றும் எழுத்து மூல ஆவணங்கள் என்முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.*

*ஏ. எம். விக்ரமாரச்சி,*
*பிரதேச செயலாளர்,*
*மெததும்பர.*

*பிரதேச செயலகம்,*
*மெததும்பர,*
*2017, திசெம்பர் 28*

*1 - 689*

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இல. 1996/3 மற்றும் 2016.12.05 ம் திகதி இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவில் பரபெவில மற்றும் கொரதொலுவ கிராமங்களில் அமைந்துள்ள மு. கி. வ. இல. கு 2343ல் KU/PLG/ 2016/626 எனும் இலக்கத்திற்கு கீழ் உள்ள துண்டு இல. 128 கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு திருத்தப்படுதல் வேண்டும்.

**துண்டு இல. 138**

காணியின் பெயர் : கொஸ்உல்லே வத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஹேரத்முதியன்சேலாகே பிரேமதாச பண்டா; விஸ்தீரணம்: 0.0379 ஹெக்டயார்.

**துண்டு இல. 139**

காணியின் பெயர் : கொஸ்உல்லே வத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: சதுருசிங்க ஆரச்சிலாகே கமலா பத்மலதா குமாரி; விஸ்தீரணம்: 0.0474 ஹெக்டயார்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை,
2017, நவம்பர் 29.

01 - 690

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: ரீஎச்ஐ/எல்என்டீ/எல்2/ஏசீகியூஐ/132
காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/6/2015/எச்டப்ளியூ/267

திஹகொடை பிரதேச செயலாளர் உமேஷா சுரங்கி மாதரகே ஆகிய நான் தெற்கு அதிவேக வீதி கருத்திட்டத்தில் குறுக்கு வீதி நிர்மாணிப்பதற்காக வெளியிடப்பட்ட 2017.11.20 ஆம் திகதி இல. 2046/6 இலங்கைச் ஜனநாயக சோசலிச குடியரசின் அரச வர்த்த மானப் பத்திரிகையில் 6ஏ பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டில் இல.28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் நஷ்ட ஈட்டு வினவல் 2018.01.22 ஆம் திகதி என திருத்தம் செய்யப்படுகிறது என இத்தால் மூலம் அறிவிக்கின்றேன்.

உமேஷா சுரங்கி மாதரகே,
பிரதேச செயலாளர்
திஹகொடை.

பிரதேச செயலகம்,
திஹகொடை.
2018, சனவரி 03.

01 - 691

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.